## தலைப்பு 413 – நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் இராஜாங்க அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இராஜாங்க அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) வகைப்படுத்தல் தவறுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ரூபா 48,000 கூட்டுமொத்தமான உள்ளூர் பிரயாணச் செலவினங்கள் செலவின விடயம் 1101 இன் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக செலவின விடயம் 413-1-1-1409 இன் கீழ் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. | தங்குமிட வசதிகளுகள் தொடர்பாக ரூபா 48,000 தொகை செலவிடப்பட்டிருந்ததால் அந்தத் தொகை செலவின விடயம் 413-1-1-1409 (ஏனைய சேவைகள்) இன் கீழ் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. | கணக்குகளுக்கு கொடுப்பனவுகளை கொண்டுவரும் போது சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இது 2021 யூன் 06 இல் முடிவுறுத்தப்பட்ட போது இராஜாங்க அமைச்சு தயாரித்த நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ஆதனம், | 2021.06.06 முதல் அமுலுக்கு வரும் வகையில் தலைப்பு 413 இன் கீழ் பேணப்படும் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்குகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 22,336,274 ஆக காணப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு எந்த பெறுமதியும் காட்டப்பட்டிருக்கவில்லை. அந்த சொத்துக்கள் வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதென நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | நிதி அமைச்சின் நோக்கெல்லைக்குள் கொண்டுவரப்பட்டது. 2021.06.06 - 2021.12.31 காலப்பகுதியின் போது இராஜாங்க அமைச்சின் செலவினங்கள் அதே செலவினத் தலைப்பு 413 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டன, மேலும் அந்தத் தலைப்பு தொடர்பான கணக்குகள் 2021.12.31 இல் உள்ளவாறு மூடப்பட்டன, இதன் மூலம் அத் திகதியில் உள்ளவாறான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. 2021.06.06 இல் உள்ளவாறு கணக்காய்வுக்கு எந்தக் கணக்கும் சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் இராஜாங்க அமைச்சின் உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த திகதியில் உள்ளவாறான விவகாரங்கள் பற்றிய அறிக்கை மாத்திரமே பெறப்பட்டது. | கொண்டு வரப்பட வேண்டும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களாக ரூபா 6,976,244 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்கள் தொடர்பான கோவைகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | 2021.10.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டது. அப்போது இராஜாங்க அமைச்சின் அனைத்து பிரிவுகளிற்கும் உரிய கோவைகள் ஒப்படைக்கப்பட்டன. நீங்கள் கோரிய கோவைகளை கண்டறிவதில் உள்ள சிரமம் காரணமாக, தொடர்புடைய கோவைகளைக் கண்டறிவதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது. எனவே, கணக்காய்வால் கோரப்பட்ட திகதியில் கோவைகளை சமர்ப்பிக்க முடியவில்லை. | கொடுக்கல்வாங்கல்களை திருப்திகரமாக உறுதிப்படுத்தும் பொருட்டு மெய்மையாய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | உள்ளூர் பிரயாணச் செலவினங்களாக ரூபா 1,599,250 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக | பிரயாணச் செலவினங்கள் தொடர்பாக செலவிடப்பட்ட ரூபா 1,599,250 தொகைக்குரிய பொது 177 உறுதிச்சீட்டு படிவம் சம்பள உறுதிச்சீட்டுக்களுக்கான | பொது 172 படிவத்தின் பிரகாரம் உள்ளூர் பிரயாணச் செலவினங்களுக்கு |

| | | |
|---|---|---|
| பொது-172 படிவம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, அந்த உறுதிச்சீட்டுக்கள் ஒரு தனியான கோவையில் பேணப்பட்டுள்ளதுடன் தேவைப்பட்டால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியும். | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். |

**(ஈ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) | சனாதிபதி செயலகத்தின் 1991 திசெம்பர் 31 ஆம் திகதிய பிபிஏ/6/1/1 ஆம் இலக்க மற்றும் 2010 யூலை 09 ஆம் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | இராஜாங்க அமைச்சின் உத்தியோகத்தர்கள் ரஷ்ய சுற்றுப்பயணத்தில் பங்கேற்று ரூபா 3,955,281 தொகையை செலவிட்டிருந்தனர். ஆனால் சுற்றுப்பயணம் தொடர்பான அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | சனாதிபதி செயலகத்தின் 1991 திசெம்பர் 31 ஆம் திகதிய பிபிஏ/6/1/1 ஆம் இலக்க மற்றும் 2010 யூலை 09 ஆம் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம், குறித்த அறிக்கையானது, நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரால் ஜனாதிபதி செயலாளரிடம் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ மற்றும் அவசரத் தேவைக்காக உள்நாட்டு விமான சேவையைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காரணங்கள் எதுவும் வழங்கப்படாமல், | தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விசேட உத்தியோகபூர்வ நோக்கத்தின் பேரில் யாழ்ப்பாண சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்கள் 2021.02.27 முதல் | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இராஜாங்க அமைச்சின் 03 உத்தியோகத்தர்கள் உள்நாட்டு விமான சேவையைப் பயன்படுத்தியதற்காக ரூபா 100,050 தொகையை செலவிட்டிருந்தனர். | 2021.03.01 வரை யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 உத்தியோகத்தர்களுடன் இணைந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்பகுதியில் உள்ள தொழில்துறையினர், விவசாயம் உள்ளிட்ட ஏற்றுமதி தொழில்முனைவோர் மற்றும் வங்கியாளர்களுடன் தொடர் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. எனவே, தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக உள்நாட்டு விமான சேவையைப் பயன்படுத்த முடியும். | |
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 ஆம் பந்திகள் | இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு சோதனைகள் தொடர்பான பதிவுகள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சு மற்றும் நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வு சோதனைகளை செய்ய முடியவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை<br>06 செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,650,000 நிதியேற்பாடு மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாததால் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செலவினத் தலைப்பு மற்றும் அதன் கீழ் உள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகள், முன்னுரிமைகள் மற்றும் நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பு என்பன 2021.10.06 ஆம் திகதிய 2248/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நிதி அமைச்சின் தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. எனவே, எதிர்பார்த்தவாறு செலவினங்களைச் செய்ய முடியவில்லை, மேலும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வழக்கம் போல் செய்யப்படாததால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவினங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டமை<br>28 செலவின விடயங்களின் கீழ் ரூபா 67,071,025 தொகையான மேலதிக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் ரூபா 31,279,144 கூட்டுமொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது, இதனால் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் நிதியேற்பாட்டில் 15-99 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 35,791,881 தொகை சேமிக்கப்பட்டுள்ளது. | நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செலவினத் தலைப்பு மற்றும் அதன் கீழ் உள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகள், முன்னுரிமைகள் மற்றும் நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பு என்பன 2021.10.06 ஆம் திகதிய 2248/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நிதி அமைச்சின் தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. எனவே, எதிர்பார்த்தவாறு செலவினங்களைச் செய்ய முடியவில்லை, மேலும் கொவிட்- | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவினங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 19 தொற்றுநோய் காரணமாக உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் வழக்கம் போல் செய்யப்படாததால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் கணக்காய்விற்கு பிரதியொன்று சமர்ப்பிக்கப்படும். | குறித்துரைத்த காலத்திற்குள் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றும் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 குறித்துரைக்கப்பட்ட கடமைகள், செயற்பாடுகள் மற்றும் முன்னுரிமைகள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2021 செப்தெம்பர் 30 இல் 13 மாத காலத்திற்குப் பின்னர் இராஜாங்க அமைச்சு கலைக்கப்படும் போது அரசாங்க நிதியிலிருந்து ரூபா 74,588,694 தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இராஜாங்க அமைச்சை நிறுவுவதற்கான நோக்கங்கள், கடமைகள், செயற்பாடுகள் மற்றும் முன்னுரிமைகள் தொடர்பான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | 2021.10.06 ஆம் திகதிய 2248/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு முடிவுறுத்தப்பட்டிருந்ததால், இராஜாங்க அமைச்சின் அனைத்து செயற்பாடுகளும் 2021 ஒக்தோபர் நடுப்பகுதியில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஏனைய நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டு முடிவுக்கு வந்திருந்தது. எனவே, 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. | செலவிடப்பட்ட நிதியின் முன்னேற்றம் அறிக்கையிடப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,900 பெறுமதியான ஹார்ட் டிஸ்க் (Hard Disk) இராஜாங்க அமைச்சில் தற்காலிகமாக பணிக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் எடுக்கப்பட்டிருந்தது. இராஜாங்க அமைச்சு கலைக்கப்படும் போது அந்த ஹார்ட் டிஸ்க்கை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ஹார்ட் டிஸ்க்கை மீளளிக்குமாறு கோரி 2021.09.04 ஆம் திகதிய எஸ்எம்எம்சீஎம்/எவ்ஜஎன்/03/01/02 ஆம் இலக்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் அலுவலக பிரதி ‘‘பொருளிருப்பு உருப்படிகளை வழங்குதல்’’ என்ற தலைப்பிலான கோவையில் சேர்க்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொருளிருப்பு கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஒக்தோபர் 06 ஆம் திகதிய 2248/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டிருந்த போதிலும் அப்போது வரை இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது தனிப்பட்ட பதவியணியினர் பயன்படுத்திய 08 வாகனங்கள் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சர் மற்றும் பதவியணியினரிற்கு உத்தியோகபூர்வ வாகனம் நிதி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. எனவே, நிதி அமைச்சானது நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சை கலைத்த பின்னர் புதிதாக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் வாகனங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. | இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்ட நிலையில், உத்தியோகத்தர்களிடம் இருந்து சொத்துக்கள் முறையாக கையேற்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இராஜாங்க அமைச்சின் செயலாளர் 2021 ஏப்ரல் 07 இல் ஓய்வு பெற்றிருந்ததால், அவர் பயன்படுத்திய ரொயாட்டோ பிராடோ ஜீப் இராஜாங்க அமைச்சரின் பொதுமக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பு செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டவுடன் அந்த பதவி இரத்து செய்யப்பட்டதால் 2022 ஏப்ரல் 21 வரையிலும் வாகனம் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டதால், KJ - 3960 ஆம் இலக்க ஜீப் அரசாங்க கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சிற்காக தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. அவ் வாகனம் 2022.04.22 இல் நிதி அமைச்சிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. | இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்ட நிலையில், உத்தியோகத்தர்களிடம் இருந்து சொத்துக்கள் முறையாக கையேற்கப்பட வேண்டும். |